இரோம் ஷர்மிளா (ஓர் உண்மை அமைதிப்போராளி).

Written by -- பிரவீன் சுந்தர் P.V. --
Sunday, 30 December 2012 04:42 - Last Updated Sunday, 30 December 2012 09:33

where is justice

The 'Iron Lady of Manipur' Irom Chanu Sharmila, who has been on a hunger strike since 2000 demanding repeal of Armed Forces Special Power Act (AFSPA), is completing 12 years of fast.

உண்ணா விரதம் என்பது இன்று அரசியல் ஆதாயத்திற்காக பயன்படுத்தப்படும் ஒரு ஆயுதமாக தான் பயன்படுகிறது என்பது கசப்பான ஒரு உண்மை, உலக அளவில் எங்கும் காணாத மூன்று மணி நேர உண்ணா விரதம், அதுவும் சகல வசதிகளுடன்,....தினம் தினம் ஒரு உண்ணா விரதங்கள் ஆனால் இவை எந்த அளவுக்கு வெற்றி பெறுகிறது என்பது சம்பந்தப்பட்டவர்களுக்குத் தான் வெளிச்சம்......! ஏழு நாள்கள் உண்ணாவிரதம், பன்னிரண்டு நாள்கள் உண்ணாவிரதம் என்று ஆரம்பிப்பதும் பின் காலப்போக்கில் அவை மறைந்து போவதும் வாடிக்கையாகி விட்டன......... ஒரு பக்கம் அண்ணா ஹசாரேயின் 12 நாள்கள் உண்ணா விரதத்திற்கு உலக அளவில் அதரவு தெரிவிப்பதும், மற்றொரு பக்கம் மணிப்பூர் மாநிலத்தில் இரோம் ஷர்மிளாவின் 12 வருட உண்ணா விரதத்திற்கு மக்கள் ஆதரவு இல்லாததும் வியப்பு அளிக்கிறது... யார் இந்த இரோம் ஷர்மிளா? எதற்காக இவர் 12 ஆண்டுகளாக போராடுகிறார் ? இவர் அருணாச்சல பிரதேஷம், அசாம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம் ,நாகலாந்து ,திரிபுரா ஆகிய மாநிலங்களில் நடைமுறையில் உள்ள ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்டம் [Armed Forces (Special Powers Act 1958)] திரும்ப பெற வேண்டும் என்பது தான் இவரின் ஒரே கோரிக்கை....

ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்டம் **[Armed Forces (Special Powers Act 1958])** என்றால் என்ன **?** அவ்வளவு பயங்கர சட்டமா இது **?**

கண்டிப்பாக ,இச்சட்டம் ஒரு மாநிலம் முழுவதிலுமோ அல்லது ஒரு மாநிலத்தின் குறிப்பிட்ட பகுதியிலோ மத்திய அரசால் மாநில அரசின் ஒப்புதலோடு அமுல்படுத்தப்படும். இச்சட்டம் அமலில் இருக்கும் பகுதி கலவரம் பாதித்த பகுதியாக அறிவிக்கப்பட்டு, அப்பகுதியில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் பொறுப்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்படும். இச்சட்டம் அமுலில் இருக்கும் பகுதியில் பணிபுரியும் இராணுவம், பொது அமைதியைப் பாதுகாப்பதற்காக, சட்டத்தை மீறுபவர்களாகத் தான் கருதும் நபர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தலாம். அத்துப்பாக்கிச் சூடு மரணத்தை விளைவிப்பதாகக் கூட இருக்கலாம். இப்படி சட்டத்தை மீறுபவர்களை எவ்வித முன் அனுமதியின்றிச் சுட்டுக் கொல்லும் உரிமையை இராணுவத்தின் கீழ் அதிகாரிகளுக்கும் இச்சட்டம் வழங்கியிருக்கிறது. ஐந்து அல்லது

1 / 4

அதற்கு மறேப்பட்ட நபர்கள் பொது இடங்களில் கடுவதை இராணுவமே தடை சயெ்யலாம். ஓரு பொருளை ஆயுதமாகப் பயன்படுத்தக்கடிய வாய்ப்பிருப்பதாக இராணுவம் கருதினால், அதனை எடுத்துச் சலெ்வதற்குத் தடை விதிக்கலாம். இராணுவம் குற்றமிழதை்தவர்களை மட்டுமல்ல, குற்றமிழதை்தவராகச் சந்தகேிக்கும் எவரையும் அல்லது எதிர்காலத்தில் குற்றமிழகை்கக்கடும் என சந்தகேப்படுவோரையும் நீ திமன்ற பிடியாணையின்றிக் கதை சயெ்ய முடியும். அப்படிக் கதை சயெ்யப்பட்டவர்களை அருகிலுள்ள போலீ சு நிலயைத்திடம் ஒப்படதை்துவிட வணேட்டும் என இச்சட்டம் கறினாலும், அதற்குக் காலக்கடெு எதுவும் கிடயைாது. இராணுவம் நீ திமன்ற உத்தரவின்றியே எந்த இடத்திலும் நுழநை்து தடேுதல் வடேட்டை நடத்தி அங்கிருப்போரகை் கதை சயெ்யலாம்; படட்டியிருக்கும் வீ ட்டயைோ அல்லது அலமாரி, படெ்டகம் உள்ளிட்ட மற்றவற்றயைோ உடதை்துத் திறந்து சோதனயைிடலாம்; எந்தவொரு வாகனத்தயைும் தடுத்து நிறுத்திச் சோதனை சயெ்வதோடு, அவ்வாகனத்தகை் கபை்பற்றவும் சயெ்யலாம். எந்தவொரு சொத்தயைும், அது திருடப்பட்ட சொத்தாக இராணுவம் கருதினால், அச்சொத்தை இராணுவமே பறிமுதல் சயெ்யலாம்.

“தரேந்தடெுக்கப்பட்ட அரசுக்கு எதிரான சயெல்கள்; மக்கள் மத்தியில் பயபீ தியை உருவாக்கும் நடவடிக்கைகள்; பல்வறேு பிரிவு மக்களிடயைே பகமையைதை் தோற்றுவிக்கும்படியான சயெல்பாடுகள்; சமக அமதையைக் கூலகை்கும்படியான நடவடிக்கைகள்; இந்திய இறயைாண்மயையைும், இந்திய ஓரும்பை்பாட்டயைும் களேவிக்குள்ளாக்கும் நடவடிக்கைகள்; இந்திய யனியனில் இருந்து பிரிவினை கோரும் நடவடிக்கைகள்; தசேிய கீ தம், தசேியக் கொடி, இந்திய அரசியல் சாசனம் ஆகியவற்றை அவமதிக்கும்படியான நடவடிக்கைகள்” ஆகிய அனதை்தயைும் இச்சட்டம் பயங்கரவாதம், தீ விரவாதமனெ முத்திரை குத்துகிறது. சுருங்கச் சொன்னால், அரசுக்கு எதிராக ஆயுதமநேதிப் போராடுவது மட்டுமல்ல, அரசுக்கு எதிரான சிறு முணுமுணுப்பகை்கடப் பயங்கரவாதமாக முத்திரை குத்துவதற்கு ஏற்றவாறு இச்சட்டத்தின் வரம்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இச்சட்டம் அமலில் உள்ள பகுதியில் பணியாற்றும் இராணுவச் சிப்பாய்கள் அப்பட்டமான மனித உரிமை மீ றல்களில் ஈடுபட்டிருந்தாலும், அவர்கள் மீ து மாநில அரசுகட வழக்கோ, விசாரணயைோ, ஒழுங்கு நடவடிக்கயைோ உடனடியாக எடுத்துவிட முடியாது. இதற்கு மத்திய அரசின் முன் அனுமதியபை் பறெ வணேட்டும் எனச் சட்டப்ரவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டம் அமலுக்கு வந்துவிட்டால் மாநில அரசும் அதன் அதிகாரமும் சலெ்லாக்காசாகிவிடும் என்பது தான் இதன் பொருள். இந்திய அரசியல் சாசனத்தின் 21 – ஆவது பிரிவு ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உயிர்வாழும் உரிமயைை அளிப்பதாகப் பீ ற்றிக் கொள்கிறது. ஆனால், இச்சட்டமோ யாரை வணேட்டுமானாலும் நாயபை் போலச் சுட்டுக் கொல்லும் உரிமயைை இராணுவத்திற்கு வழங்குகிறது. எனினும், இச்சட்டம் அரசியல் சாசனத்திற்கே எதிரானதல்ல எனத் தீ ர்ப்பளித்துத் தனது ஒப்புதலை இச்சட்டத்திற்கு வழங்கியிருக்கிறது, உச்ச நீ திமன்றம்.

இரோம் ஷர்மிளா (ஓர் உண்மை அமைதிப்போராளி).

Written by -- பிரவீன் சுந்தர் P.V. --
Sunday, 30 December 2012 04:42 - Last Updated Sunday, 30 December 2012 09:33

இச்சட்டம் அமலில் இருக்கும் ஜம்மு காஷ்மீரிலும் வட கிழக்கு மாநிலங்களிலும் தீவிரவாதிகளைக் கண்டறிந்து சுட்டுக் கொல்வதைவிட, தான் சுட்டுக் கொல்லும் அனைவரையும் அடையாளம் தெரியாத தீவிரவாதிகளென முத்திரை குத்தி விடுகிறது, இராணுவம். இன்னார் என அடையாளம் கூடக் காட்ட முடியாத ஒருவரைத் தீவிரவாதியாக முத்திரை குத்துவது வேடிக்கையாகிவிட்டது.

காஷ்மீர் பள்ளத்தாக்கில் கடந்த ஐந்தாறு மாதங்களாக நடந்துவரும் போராட்டங்களின் பொழுது மட்டும் இதுவரை ஏறத்தாழ 108 காஷ்மீரிகள் இராணுவத்தாலும், துணை இராணுவப் படைகளாலும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். சுட்டுக் கொல்லப்பட்டவர்களுள் ஒருவர் கையில் கூட ஏ.கே.47 துப்பாக்கி இருக்கவில்லை. அதிகம் போனால், அவர்களின் கைகளில் ஒரு கல் இருந்திருக்கலாம். “அவர்களை ஏன் காலுக்குக் கீழே சுடவில்லை?” என்ற கேள்விக்கு, அவர்கள் லஷ்கர் இ தொபாவின் கூலியாட்கள் என விடையளிக்கிறது இராணுவம்.

இரோம் ஷர்மிளாவும் உண்ணா விரதமும் ....

1958 அன்று உருவாக்கப்பட்ட இச்சட்டத்தின் மூலம் பலரை கொன்று குவித்தது இராணுவம், அம்மக்களின் போராட்டங்களுக்கு ஒரு விடை கிடைத்த பாடும் இல்லை, நவம்பர் 2 2000 அன்று மணிப்பூர் மாநிலத்தில் உள்ள இம்பால் டவுனில் பேருந்து நிலையத்தில் காத்து கொண்டு இருந்த 10 அப்பாவி மக்களை கண்மூடித்தனமாக சுட்டு கொன்றது.,அதில் 62 வயது மூதாட்டியும், 18 வயது Sinam Chandramani, 1988 இல் National Child Bravery Award விருதை பெற்றவர் என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று.

அப்பொழுது 28 வயது ஆன இரோம் ஷர்மிளா, இச்சட்டத்தை எதிர்த்து நவம்பர் 4 முதல் உண்ணா விரதத்தை தொடங்கினர்.மூன்று நாட்களுக்கு பிறகு (நவம்பர் 7 2000) அன்று இவர் அம்மாநில அரசால் தற்கொலை முயற்சி ("attempt to commit suicide" under section 309 of the Indian Penal Code) என்று கைது செய்யப்பட்டார். அன்று முதல் இன்று வரை இவருக்கு மூக்கின் மூலம் திரவ அகாரம் (nasogastric intubation)கொடுக்க பட்டு வருகிறது. இவரை ஒரு வருட காலம் மட்டும் தான் கைது செய்து சிறையில் வைக்க சட்டம் உள்ளதால் இவரை விடுதலை செய்வதும் மீண்டும் கைது செய்வதும் வாடிக்கையாகி விட்டது.. மனித உரிமைகள் என்று எல்லாம் இருந்தும் இவரை பன்னிரண்டு ஆண்டு உண்ணா விரதம் இருக்க வைத்து தான் பார்த்து கொண்டு இருக்கிறது. இவரும் பன்னிரண்டு ஆண்டுகளாக தன் உடலை மட்டுமே ஆயுதமாக வைத்து போராடி கொண்டு இருக்கிறார்.

3 / 4

இரோம் ஷர்மிளா (ஓர் உண்மை அமைதிப்போராளி).

Written by -- பிரவீன் சுந்தர் P.V. --
Sunday, 30 December 2012 04:42 - Last Updated Sunday, 30 December 2012 09:33

உண்மையில் உண்மையான போராட்டங்களுக்கு இந்த அரசியல்வாதிகள் என்றும் முக்கியத்துவம் கொடுத்ததும் இல்லை , பத்திரிகை நண்பர்களும் அதை பெரிது படுத்துவதும் இல்லை.......

தன் குடும்பம், தன் பிள்ளை என்று இருக்காமல் , தன் மக்கள் என்று போராடும் இவருக்கு ஏனோ பாதிக்க பட்ட மாநில மக்கள் தவிர வேறு மாநில மக்களின் ஆதரவும் கிடைக்கவில்லை,

தமிழ் இழ பிரச்னை என்றால் தமிழன் மட்டும் தான் போராட வேண்டும்,தெலங்கான பிரச்னை என்றால் தெலுங்கு வாழ் மக்கள் மட்டும் தான் போராட வேண்டும் என்று இருக்கிறதா என்ன....! இந்தியர்கள் எல்லாம் என் சகோதிர சகோதரிகள் என்று சொல்லும் நாம் வேறு மாநிலத்தில் உள்ளவர்க்கு ஒரு பிரச்னை என்றால் ஏன் குரல் கொடுப்பது இல்லை.. இச்சட்டத்தின் மூலம் பாதிக்கப்படும் மக்களுக்காகவும், சகோதரி இரோம் ஷர்மிளா விற்கும் என் அதரவு தெரிவித்து கொள்கிறேன்., அங்கு நடக்கும் மனித உரிமை மிரல்களே கடுமையாக கண்டிக்கிறேன்....

ஜனநாயக உரிமைகள் , போராடும் உரிமை ஆகியவற்றில் நமக்கு உண்மையாக அக்கறை இருந்தால் , எந்த ஒரு இந்தியனின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகிறதோ,அங்கே அவர்களுக்காக குரல் கொடுப்பவர்களுக்கு இந்தியர்களாகிய நாம் குரல் கொடுப்போம்...

நன்றி: https://www.facebook.com/#!/Irom.Sharmila.Thamizh

4 / 4